# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# மூன்றாம் பத்து

## நான்காம் திருவாய்மொழி - புகழுநல்லொருவன்
## எம்பெருமான் எப்பொருளுமாய் நிற்பதைப் பேசி வாசிகமான அடிமை செய்தல்

** புகழு நல் ஒருவன் என்கோ? * பொருவில் சீர்ப் பூமி என்கோ? *
திகழும் தண்பரவை என்கோ? * தீ என்கோ? வாயு என்கோ? **
நிகழும் ஆகாசம் என்கோ? * நீள் சுடர் இரண்டும் என்கோ? *
இகழ்வில் இவ்வனைத்தும் என்கோ? * கண்ணனைக் கூவும் ஆறே 1

கூவும் ஆறு அறிய மாட்டேன் * குன்றங்கள் அனைத்தும் என்கோ? *
மேவு சீர் மாரி என்கோ? * விளங்கு தாரகைகள் என்கோ? **
நா இயல் கலைகள் என்கோ? * ஞான நல் ஆவி என்கோ? *
பாவு சீர்க் கண்ணன் எம்மான் * பங்கயக் கண்ணனையே 2

பங்கயக் கண்ணன் என்கோ? * பவளச் செவ்வாயன் என்கோ? *
அங்கதிர் அடியன் என்கோ? * அஞ்சன வண்ணன் என்கோ? **
செங்கதிர் முடியன் என்கோ? * திரு மறு மார்வன் என்கோ? *
சங்கு சக்கரத்தன் என்கோ? * சாதி மாணிக்கத்தையே 3

சாதி மாணிக்கம் என்கோ? * சவி கொள் பொன் முத்தம் என்கோ? *
சாதி நல் வயிரம் என்கோ? * தவிவில் சீர் விளக்கம் என்கோ? **
ஆதி அஞ்சோதி என்கோ? * ஆதி அம்புருடன் என்கோ? *
ஆதும் இல் காலத்து எந்தை * அச்சுதன் அமலனையே 4

அச்சுதன் அமலன் என்கோ? * அடியவர் வினை கெடுக்கும் *
நச்சு மா மருந்தம் என்கோ? * நலங்கடல் அமுதம் என்கோ? **
அச்சுவைக் கட்டி என்கோ? * அறு சுவை அடிசில் என்கோ? *
நெய்ச் சுவைத் தேறல் என்கோ? * கனி என்கோ? பால் என்கேனோ? 5

பால் என்கோ? * நான்கு வேதப் பயன் என்கோ? * சமய நீதி
நூல் என்கோ? * நுடங்கு கேள்வி இசை என்கோ? ** இவற்றுள் நல்ல
மேல் என்கோ? * வினையின் மிக்க பயன் என்கோ? * கண்ணன் என்கோ?
மால் என்கோ? மாயன் என்கோ? * வானவர் ஆதியையே 6

வானவர் ஆதி என்கோ? * வானவர் தெய்வம் என்கோ? *
வானவர் போகம் என்கோ? * வானவர் முற்றும் என்கோ? **
ஊனம் இல் செல்வம் என்கோ? * ஊனம் இல் சுவர்க்கம் என்கோ? *
ஊனம் இல் மோக்கம் என்கோ? * ஒளி மணி வண்ணனையே 7

ஒளி மணி வண்ணன் என்கோ? * ஒருவன் என்று ஏத்த நின்ற *
நளிர் மதிச் சடையன் என்கோ? * நான்முகக் கடவுள் என்கோ? **
அளி மகிழ்ந்து உலகம் எல்லாம் * படைத்து அவை ஏத்த நின்ற *
களி மலர்த் துளவன் எம்மான் * கண்ணனை மாயனையே 8

கண்ணனை மாயன் தன்னைக் * கடல் கடைந்து அமுதம் கொண்ட *
அண்ணலை அச்சுதனை * அனந்தனை அனந்தன் தன் மேல் **
நண்ணி நன்கு உறைகின்றானை * ஞாலம் உண்டு உமிழ்ந்த மாலை *
எண்ணும் ஆறு அறிய மாட்டேன் * யாவையும் யவரும் தானே 9

யாவையும் யவரும் தான் ஆய் * அவர் அவர் சமயம் தோறும் *
தோய்விலன் புலன் ஐந்துக்கும் * சொலப்படான் உணர்வின் மூர்த்தி **
ஆவி சேர் உயிரின் உள்ளால் * ஆதும் ஓர் பற்றிலாத *
பாவனை அதனைக் கூடில் * அவனையும் கூடலாமே 10

** கூடி வண்டறையும் தண்தார்க் * கொண்டல் போல் வண்ணன் தன்னை *
மாடலர் பொழில் குருகூர் * வண் சடகோபன் சொன்ன **
பாடல் ஓர் ஆயிரத்துள் * இவையும் ஒரு பத்தும் வல்லார் *
வீடில போகம் எய்தி * விரும்புவர் அமரர் மொய்த்தே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---